

ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜ.க. மாவட்ட செயலாளர் (OBC) பாலன், தனது பாஜக உறுப்பினர் அட்டையை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணைச்செயலாளர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நேற்று (14.9.2026) மொடக்குறிச்சி பேரூர் கழகச் செயலாளர் பி.வி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் மொடக்குறிச்சி அன்பகம் உதயம் அலுவலகத்தில் கழகத்தில் இணைந்தார்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் 2026 முன்னிட்டு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் தலைமையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கருங்குழி பேரூர் பகுதியில் நிர்வாகிகளை சந்தித்து தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை , வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரினார் உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி உள்ளிட்ட பொது குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### ஜெ.நடராஜன் – துர்காதேவி நடராஜன் எம்.சி. ஏற்பாட்டில் – ஆலந்தூர் தெற்குப் பகுதி

# 167-வது வட்டத்தில் அண்ணா பிறந்தநாள்! 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி!

### தா.மோ. அன்பரசன் – ஆர்.எஸ்.பாரதி வழங்குகின்றனர்! என்.சந்திரன் எம்.சி. முன்னிலை!

சென்னை,செப்.15-

ஆலந்தூர் தெற்குப் பகுதியில் பேறறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இன்று 15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 7 மணி அளவில் 167- வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன் ஆகியோர் ஏற்பாட்டில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும் 12-வது குண்டலக்குழு தலைவர் என். சந்திரன் முன்னிலையில், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சர் தா. மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் கலந்து கொண்டு எம்ஜிஆர் ரோட்டில் அமைந்துள்ள ஸ்டேட் பாங்க் காலனியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, கழக கொடி ஏற்றி, தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் 500 நபர்களுக்கு, காலை சிற்றுண்டி வழங்குகிறார்கள்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி-வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், மூத்த கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை

# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

### திருவுருவச் சிலைக்கு மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை

சென்னை, செப்.15-

சைதாப்பேட்டை, 139 வது வட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோவில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவசு சிலைக்கு இன்று 15.9.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலை 7 மணியளவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அட்கோ கமலநாதன், சை.மு.சேகர் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இதில் மு.மகோஷ்குமார், எஸ்.குணசேகரன், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, டி. என்.சிவமணி, சைதை த.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், சைதைசாதிக், ந.தமிழரசு, எஸ்.பி. தோதண்டம், எம்.நாகா, நா.மணிகண்டன், ஆர். கிருஷ்ணகுமார், நரேஷ்குமார், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன், எல். சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ.சுப்பிரமணி, து.கொடி சுரேஷ், டி.கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமது அலி, இ.ஏழுமலை, யமஹாராஜேஷ், ஜிம்.பிரபு, ம.தீலிப்பன், க.ரஞ்சித், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார். தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

### சோபா மாடல் விஜய் அரசு எவ்வாறு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றார்களோ,

# அதே மக்கள் விரைவில் அவர்களுக்கு உரிய பதிலடியை வழங்குவார்கள்!

### பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய மறு சீரமைப்பு ஆய்வுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், செப். 15;

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூந்தமல்லி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பான கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம், ஒன்றியக் கழகச் செயலாளர் டி. தேசிங்கு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய துணைச் செயலாளர் சி.அண்ணாகுமார் வரவேற்புரையாற்றினார். ஒன்றியக் கழக நிர்வாகிகள் இ.கந்தபாபு, சுமதி விஜயகுமார், ஜெ. சாக்ரடீஸ், ஜி.சுகுமார், எம்.குணசேகரன், இ.கந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.சி.சி.கருணாநிதி, ஜி.பிரவீன்குமார், வெள்ளவேடு கே.கோபிநாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டு, கழக நிர்வாக மறுசீரமைப்பு பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினர்.

கிளைகள் முதல் ஒன்றியம் வரையிலான கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்துதல், நிர்வாகப் பணிகளை முறைப்படுத்துதல், கழக நிர்வாகிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், தொண்டர்களின் பங்களிப்பை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிர்வாக மறுசீரமைப்பு பணிகளுக்கான படிவங்கள் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டு, அவற்றை முழுமையாகவும் முறையாகவும் பூர்த்தி செய்து உரிய முறையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் ஆவடி சா.மு.நாசர் பேசுகையில் கூறியதாவது:

“அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பொய்யான வாக்குறுதிகளையும், ரீல்ஸ் பிம்பத்தையும் முன் வைத்து மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் ஆட்சி நடத்தி வருகின்றனர். இன்றைய ஆட்சியில் பொறுப்பேற்றது முதல், கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், திருட்டு உள்ளிட்ட பல்வேறு சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பொதுமக்கள் மத்தியில் கவலை எழுந்துள்ளது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய அரசு, அதற்குப் பதிலாக ஆட்சியின் தோல்விகளை மறைப்பதிலேயே கவனம் செலுத்துகிறது.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பும் கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்க முடியாமல், கேள்வியை திசை திருப்பும் வகையில் பொதுக்கூட்ட மேடைகளில் சினிமா வசனங்களைப் பேசுவது ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு அழகல்ல. சட்டமன்றம் என்பது மக்கள் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய இடம்; சினிமா மேடை அல்ல! மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி மக்கள் வாக்களித்திருக்கலாம். ஆனால், ஆட்சியின் உண்மை நிலையை மக்கள் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

எவ்வாறு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றார்களோ, அதே மக்கள் தங்களது ஜனநாயக வாக்கின் மூலம் விரைவில் அவர்களுக்கு உரிய பதிலடியை வழங்குவார்கள்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், ஜி. விமல் வர்ஷன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், மாவட்ட நிர்வாகிகள் வழக்கறிஞர் பெ.வினோத், வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, நெமிலிச்சேரி சுரேஷ்குமார், பொன்புனித ராஜ், ஜி.பி.பரனிதரன், இ.வி.இ.பிரதீப், என். லட்சுமி, உதயா, சி.கருணைக்கடல், மு.தே. ராஜேஷ், மு.உதயா, டி. மணிகண்டன், ஹரிஹரன், கார்த்திக், சிபி, ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

# ஆலந்தூர் வடக்குப் பகுதியில் அண்ணா பிறந்தநாள்! சிலைக்கு மரியாதை!

### பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை,செப்.15-

ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பேரறிஞர் அண்ணா அவர்களின் 118-வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று 15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில், ஆலந்தூர் படவேட்டம்மன் கோயில், ராஜா தெரு-பரங்கிமலை சுரங்கப்பாதை சந்திப்பு அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்துகிறார்கள்.

எனவே ஆலந்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பகுதி அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,வட்ட இளைஞரணி-மாணவர் அணி-மகளிர் அணி நிர்வாகிகள்,கழகத் தோழர்கள்,மூத்த நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்..

இவ்வாறு ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சு.மனோகர் தலைமை! சொ.வேலு முன்னிலையில்

# 78 வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா !

### பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.கழக கொடி ஏற்றி உணவு வழங்குகிறார்!

சென்னை செப்:15

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி,78வது வட்டத்தில், கழக முப்பெரும் விழா இன்று (15.09.2026 செவ்வாய்கிழமை) காலை 11மணியளவில் அண்ணா சிலை, தாணா தெரு, புரசை வாக்கத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு 78வது வட்டச் செயலாளர் சு.மனோகர் தலைமை வகிக்கிறார். எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனகுழு உறுப்பினர், சொ.வேலு முன்னிலை வகிக்கின்றார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர், பி.கே.சேகர்பாபு அவர்கள் கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

### மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, செப்.15-

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ் மொழிக்கும், தமிழருக்கும், தமிழ்மண்ணுக்கும், தங்களது வாழ்நாளையே அர்ப்பணித்த அறிவாசான் அய்யா தந்தை பெரியார், தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நாளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலத்தில் தொடங்கி, இன்று நமது தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையிலும், திராவிட மாதமாம் செப்டம்பர் திங்கள் 15, 16,17 ஆகிய மூன்று நாட்கள் மாபெரும் எழுச்சி விழாவாக ஆண்டு தோறும் நாம் கொண்டாட வருவது போல் இவ்வாண்டும், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில், இன்று (15.9.2026) மாவட்ட - பகுதி நிர்வாகிகள் அனைவரும், தத்தமது வட்டத்தில், கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, கழக கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிபரப்பி, பொது மக்களுக்கு இனிப்புகள், அறுசுவை உணவு வழங்கி எழுச்சிப் பெருவிழா வாக கொண்டாடி மகிழும் படியும், அறிவாலயம், கலைஞர் அரங்கில் இன்று நடைபெறும். தலைவர் அவர்கள், பங்கேற்று தலைமை தாங்கிச் சிறப்பிக்கும் முப்பெரும் விழா விருதுகள் வழங்கி, கழக முன்னோடிகளை பெருமைப் படுத்துங்கள் நிகழ்ச்சியிலும், பேரவை நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ச.சண்முகநாதன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாஸ்டர் தமிழ்ப்பித்தன்
### செப்டம்பர் 15 (2001)



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.